## பொள்ளாச்சி நகராட்சி

## 27.01.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

## தீர்மான எண்.2681 முதல் 2717 வரை

**2681)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை பணியில் 85 நிரந்தர பணியாளர்கள் மற்றும் வெளிக்கொணர்வு முறையில் 299 பணியாளர்கள் என மொத்தம் 384 பணியாளர்களுக்கு தூய்மை பணிக்கு தேவையான சீமாறு, கூடை, பிக்காஸ், அரிவாள், மண்வெட்டி, கொத்து, கடப்பாறை போன்ற பொருட்கள் தீர்ந்தும், தேய்மானம் அடைந்து விட்டதால் புதிய தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– த்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேறகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேறகொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5013/2020/எச்2**

**2682)** **நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் தினசரி காய்கறி வியாபார சந்தையில் உள்ள சில்லறை வியாபாரம் மற்றும் மொத்த வியாபார கடைகளின் மூன்றாண்டு குத்தகை உரிமம் காலம்** 30.11.2020 **உடன் முடிவடைந்தது உரிமம் புதுப்பிக்கப்படாததால்,** 01.12.2020 **முதல் கீழ்க்கண்ட கடையானது பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டதாக சந்தை கண்காணிப்பாளர் குறிப்பு வழங்கியுள்ளார்.**

| வ.எண் | கடையின் விபரம் | கடை எண். |
|---|---|---|
| 1 | மொத்த வியாபார கடைகள் | 32 |
| 2 | சில்லறை வியாபார கடைகள் | 18,28,55,56,58,64,106 மற்றும் 118 |

**மேற்காண் கடைகளின் குத்தகை உரிமத்தினை** 01.12.2020 **முதல் ரத்து செய்து கேட்பில் இருந்து நீக்கம் செய்திடவும், இக்கடைகளுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.**

அலுவலக குறிப்பு:

1) **மன்றம் அனுமதிக்கலாம்**
2) **அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.**3606/2020/**அ6**

**2683)** பொள்ளாச்சி நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் நான்கு தளங்கள் கொண்ட கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. பல்வேறு பணிகளுக்காக வரும் பொதுமக்கள், மற்றும் நகராட்சி அலுவலர் ஆகியோர் நான்கு தளங்களுக்கு சென்று வருவதற்கு ஏதுவாக மின்தூக்கி (Lift) அமைக்கப்பட்டு உள்ளது. மின்தூக்கியை தயாரிப்பாளரே கடந்த ஓராண்டாக பராமரிப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர். தற்பொழுது வரும் ஜனவரி 2021 மாதத்துடன் முடிவடைகிறது. தற்போது பிப்ரவரி 2021 முதல் பராமரிப்பு பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தயாரிப்பாளரான M/s.Johnson Lifts P.ltd, Coimbatore நிறுவனத்தார் ஓராண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2684)** **பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலகத்தில் அனைத்துப் பிரிவுகளில் பயன்பாட்டில் உள்ள கணினிகளை இயக்க பயன்படுத்தப்பட்டு வரும் UPS மற்றும் பேட்டரிகளை ஓராண்டிற்கு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.3.15 இலட்சம் மதிப்பீட்டிற்கு 07.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.**

| | | |
|---|---|---|
| **1.** | M/s.Syscon Systems, Coimbatore. | **மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% குறைவு.** |
| **2.** | M/s.Sagar Electronics, Pollachi | **மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.60% அதிகம்.** |

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்** M/s.Syscon Systems, Coimbatore **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு:

1. **மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.**
2. **முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.20% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்** M/s.Syscon Systems, Coimbatore **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
3. **மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்:5690/2020/இ1**

**2685)** **பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான சங்கபாளையம் கிராமத்திலுள்ள இடத்தினைச் சுற்றி கம்பி வேலி அமைப்பதற்கு ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீடிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு:

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்: 304/2021/இ1**

| | |
|---|---|
| 2686) | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் அம்பராம்பாளையம், தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100HP மின்மோட்டார் பம்பின் Unit-II, தொடர் இயக்கத்தில, Bushes, Sleeves, Bearings, water rings, shaft மற்றும் Impeller தேய்மானம் அடைந்து, இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் சீரான குடிநீர் விநியோகம் பாதிப்படைகிறது. எனவே மேற்காண் பம்பில் பழுதடைந்துள்ள உதிரிபாகங்களை புதுப்பித்து. Balancing செய்து, பொருத்தி இயக்க வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கும், இதற்கான மதிப்பீடு ரூ.80,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| 2687) | **பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 9-வது வார்டு பகுதியில் புதியதாக பழநியான்டவர் லே-அவுட் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஏறத்தாழ 20 வீடுகளுக்கும் மேல் உருவாகியுள்ளது. எனவே, பழநியாண்டவர் லே-அவுட் பகுதிக்கும் அண்ணா அவென்யூக்கும் இடைப்பட்ட தூரத்தில் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாததால் பழநியாண்டவர் லே அவுட் பகுதிக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைப்பதற்கு ரூ.0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலகக்குறிப்பு:<br>**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்: 5473/2020/இ1** |
| 2688) | **பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான சமத்தூர் இராம ஐயங்கார் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலுள்ள சத்துணவுக் கூடத்திலுள்ள Flooring முற்றிலுமாக சேதமடைந்து மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது. எனவே மேற்கண்ட சத்துணவுக் கூடத்தில் புதியதாக Flooring பணிகளை மேற்கொண்டு மராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.1.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலகக்குறிப்பு:<br>**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை கல்வி நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்: 0125/2021/இ1** |

2689) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலகத்தில் அனைத்துப் பிரிவுகளில் பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு மென்பொருள் பாதுகாப்பிற்கான Antivirus Software கொள்முதல் செய்து பொருத்துதல் பணிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 07.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s.Sagar Electronics, Pollachi. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவு. |
| **2.** | M/s.Syscon Systems, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.44% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sagar Electronics, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.21% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sagar Electronics, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:5675/2020/இ1

2690) பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட T.கோட்டாம்பட்டி நகராட்சி பள்ளியில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் கழிப்பறை கட்டுதல் மற்றும் சாய்வு தளம் அமைப்பதற்கு ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையினை கல்வி நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| 2691) | பொள்ளாச்சி நகராட்சியின் மேற்கு பகுதியில் உள்ள 18 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (வால்வு) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், மேலும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திடவும், இதற்கான மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 2692) | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைக்கு பேட்டரியால் இயங்கும் 12 வாகனங்களின் பேட்டரிகள் பழுதானதை அகற்றி புதிய 12 பேட்டரிகள் மற்றும் சார்ஜர்கள் வழங்கி பொருத்திக் கொடுத்தல் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>1. M/S.Taark Equipments Private Ltd, Pollachi. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவு.<br>2. M/S.Shasta Toolings and Solutions, Palladam. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Taark Equipments Private Ltd, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.18% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Taark Equipments Private Ltd, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:5864/2021/இ1 |

2693) பொள்ளாச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் கோயம்புத்தூர்-பொள்ளாச்சி-திண்டுக்கல்-திருச்சி-தஞ்சாவூர் நாகப்பட்டினம் (NH83) நெடுஞ்சாலை பகுதியில் சாலை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதால், இடையூறான நகராட்சியின் குடிநீர் குழாய்களை மாற்றி அமைத்துக் கொள்ள, உதவி பொறியாளர், நெடுஞ்சாலை க.(ம).ப, பொள்ளாச்சி, அவர்களின் கடிதம் க.எண்124/2020-21/உ.பொ/ நாள் 06.01.2021 வாயிலாக தெரிவித்துள்ளார். தற்போது மேற்காண் சாலையில் மரப்பேட்டை பாலம் அருகில் உள்ள தரைமட்ட பாலத்தினை இடித்து, உயர் மட்ட பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்தரைமட்ட பாலத்தின் அருகில் நகராட்சியின் சோமசுந்தராபுரம் உயர்மட்ட நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் நீரேற்று குழாய், மரப்பேட்டை, பொட்டுமேடு மற்றும் உடுமலை சாலை பகுதிகளுக்கு செல்லும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் மேற்காண் பகுதிகளுக்கு செல்லும் கிணற்று நீர் விநியோக குழாய்களும் பாதிப்படைகிறது. மேம்பாலம் பணிகள் நடைபெறுவதில் மேற்காண் குழாய்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. எனவே இப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதிப்படையாதவாறு மாற்று குழாய்களை உடனடியாக அமைத்திட வேண்டியுள்ளது. நீரேற்று குழாய் மற்றும் பகிர்மான குழாய்களுக்கு 200mm GI குழாய்களையும், கிணற்று நீர் விநியோகத்திற்கு 90mm PVC குழாயினையும் மாற்று பாதையில் அமைத்திடவும், இதற்கான மதிப்பீடு ரூ.17.60 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2694) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வாசவிநகர், CTC காலனி ஆகிய பகுதிக்கு குடிநீர் விநியோகக் குறைபாட்டை நீக்க துணை விநியோகக்குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.0.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு 06.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு. |
| 2. | திரு.G.விக்னேஷ், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.88% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:5502/2020/இ1**

**2695)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை வீதிக்கு சோமசுந்தரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் இணைத்தல் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 06.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு. |
| 2. | திரு.G.விக்னேஷ், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.58% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.07% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:5274/2020/இ1**

**2696)** பொள்ளாச்சி நகராட்சி பயன்பாட்டில் உள்ள TN 41 AA 7544 ஈர்ப்பு வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி 3 வருடங்கள் பன்படுத்தப்பட்டு தற்போது பழுது ஏற்பட்டுள்ளது. புதிய பேட்டரி மாற்றம் செய்தல் பணிக்கு கீழ்க்கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/S: J&D CO, பொள்ளாச்சி. | ரூ.7750/– |
| 2. | திருவாளர்கள்:பி.பி.ஷெரிப் ஆட்டோ டீசல், ஒர்க்ஸ், பொள்ளாச்சி. | ரூ.8100/– |
| 3. | M/S: Joseph Motor, Pollachi | ரூ.8200/– |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S: J&D CO, பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளி ரூ.7750/– ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் ரூ.7750/–ஐ பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

**ந.க.எண்.5728/2020/இ2**

**2697)** கோவை மாவட்டத்தில் அவினாசி சாலையில் கோல்ட்வின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்ட சாலை அமைத்து கோவை மாவட்டம் மற்றும் அனைத்து பொதுமக்களும் பயன்பெறும் வகையில் அமையும் இப்பாலத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் 21.11.2020 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு இப்பணியை தொடங்க 03.12.2020-ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரகவளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கோவை மாநகராட்சி அவர்கள்/தனி அலுவலர் மற்றும் நடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் களந்து கொண்டுள்ளனர்.

இந்த உயர்மட்ட பாலம் அமைவதன் மூலம் கோவை மாவட்ட பொதுமக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் போக்குவரத்து நெருக்கடியால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் விதமாக அமைக்கப்படவுள்ளது. எனவே இந்நிகழ்வினை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் நாளிதழ்களில் விளம்பரங்களை திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளிதழில் அரசு நிர்ணயித்த விலையில் (DIPR RATE), துறையின் சுயநிதியிலிருந்து 03.12.2020 அன்று கோவை மாவட்ட அளவில் வெளியாகும் நாளிதழில் விளம்பரம் பிரசுரிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்:878/செ.ம.தோ.அ/2020/01.12.2020-கடிதத்தின்படி மாவட்ட ஆடசித்தலைவர் அவர்கள் ஆணையில் பொள்ளாச்சி நகராட்சி சார்பில் 03.12.2020 அன்று மாவட்ட அளவில் தினமலர் நாளிதழில் ½ பக்க அளவில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதற்கான பட்டியலினை சமர்ப்பிக்கும் கிராபிக் ஆர்ட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (GRAPHIC ARTS INDUSTRIES) 641213 ஸ்வர்ணாம்பிகா லே-அவுட், ராம்நகர், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை நேர் செய்திட மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, மேற்காணும் விளம்பரங்கள் (GRAPHIC ARTS INDUSTRIES) நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.1,49,998/- ஐ பொதுநிதியிலிருந்து வழங்கவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:74/2021/இ1**

**2698)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் சார்பு உபகரணங்களை ஓராண்டிற்கு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.**9.50** இலட்சம் மதிப்பீட்டிற்கு **07.01.2021** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s.Syscon Systems, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.26%** குறைவு. |
| **2.** | M/s.Sagar Electronics, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.60%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.26%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

| | |
|---|---|
| | 1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.26% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:5689/2020/இ1 |
| **2699)** | பொள்ளாச்சி நகராட்சியில் அடிப்படை வசதிகள் திட்டத்தில் (Basic Amenities 2020-21) கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>பணிகள் விபரம்: |

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சமத்தூர் இராம அய்யங்கார் மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள ஸ்கேட்டிங் மைதானத்தை சுற்றிலும் சுற்றுப்பாதை அமைத்தல். | 50.00 |
| 2 | சமத்தூர் இராம அய்யங்கார் மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள ஸ்கேட்டிங் மைதானத்தை சுற்றிலும் மின் விளக்குகள் அமைத்தல். | 25.00 |
| 3 | சமத்தூர் இராம அய்யங்கார் மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள ஸ்கேட்டிங் மைதானத்தை தனிமைப்படுத்தும் விதமாக பாதுகாப்பு கருதி சுற்றிலும் சுற்றுச்சுவற்றுடன் இரும்பு கிரில் அமைத்தல். | 25.00 |
| 4 | அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள கட்டிடங்களில் மராமத்துப்பணி மேற்கொள்தல். | 50.00 |
| 5 | அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள மணல் வடிகட்டும் (Filter media) அமைப்பினை புனரமைத்தல். | 36.00 |
| 6 | அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Clariflocculator -களை புனரமைத்தல். | 19.00 |
| | மொத்தம் | **205.00** |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக, தலைமைச் செயலாளர், தலைவர் மாநில உயர்மட்ட குழு, தலைமை செயலகம் அவர்களுக்கு பரிந்துரை செய்து, நிதி மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| 2700) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான கோட்டூர் சாலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் பணிக்கு ரூ.10.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.01.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு. |

| | | |
|---|---|---|
| 1. | M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:5064/2020/இ1

| | |
|---|---|
| 2701) | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு CTC மேட்டில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிரி உரமாக்கும் மையத்தில் மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரத்தின் பழுதினை சரிசெய்தல் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி மூலம் பணியினை மேற்கொள்ள 17.11.2020-ல் ஆணையர் அவர்கள் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்காணும்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | பணியின் விபரம் | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | ANAND MOTOR REWINDING MAHALINGAPURAM POLLACHI | Bearing 2-No<br>Oil seal 3-No<br>Gear wheel change 2-No<br>Motor Work 1-No<br>Conveyer Belt 1-No | 12,000/-<br>3,000/-<br>24,000/-<br>3,000/-<br>2,200/- |
| | | G.S.T -12% | 44,200/-<br>5,304/- |
| | | Total | 49,504/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | MATHA ELECTRICALS NETHAJI ROAD, POLLACHI | Bearing 2-No<br>Oil seal 3-No<br>Gear wheel change 2-No<br>Motor Work 1-No<br>Conveyer Belt 1-No<br>G.S.T -12% | 12,600/-<br>3,000/-<br>24,600/-<br>3,600/-<br>2,200/-<br>5,520/- |
| | | Total | 51,520/- |
| 3. | HARI MOTORS S.V.NAIDU POLLACHI | Bearing 2-No<br>Oil seal 3-No<br>Gear wheel change 2-No<br>Motor Work 1-No<br>Conveyer Belt 1-No<br>G.S.T -12% | 12,500/-<br>3,000/-<br>25,000/-<br>3,500/-<br>2,400/-<br>5,568/- |
| | | Total | 51,968/- |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளித்தொகை ரூ.49,504/-ஐ கொடுத்துள்ள ANAND MOTOR REWINDING, MAHALINGAPURAM, POLLACHI அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், திடக்கழிவு மேலாண்மைப்பணியின் அவசியம் கருதி இப்பணி மேற்கொள்வதற்கான மேல்நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினம் ரூ.49,504/-ஐ பொதுநிதியில் வழங்கலாம்.
3. சுகாதாரப் பணியின் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொண்டமைக்கு முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:4792/2020/இ1

2702) நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் 01-12 பிரிவில் உள்ள நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடைகளை தனித்தனி கடைகளாக ஏலம் விடுவதற்கு நகர் மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு அக்கடைகளுக்கு சந்தை மதிப்பின்படி சதுரடி 1க்கு ரூ.4/- ஆக நிர்ணயம் செய்து குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடைகளின் தொடர்ச்சியாக அமையப்பெற்ற பகுதியில் பெட்ரோல் பங்க் அருகில் 60X60 காலியிடம் குத்தகைக்கு விடப்பட்டு லாரிப்பேட்டை கடைகள் கட்டும் பொருட்டு குத்தகை உரிமம் ரத்து செய்து முன்புறத்தில் லாரிப்பேட்டை கடைகள் கட்டப்பட்டுள்ளது. இக்கடையின் பின்புறத்தில் தற்காலிகமாக நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட 32X24=768 சதுரடி அளவிலான கடை அமைக்கப்பட்டு லாரிப்பேட்டை நுழைவு சுங்க இனத்தில் உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும், அக்கடையனை நகராட்சியின் வருவாயை பெருக்கும் வகையில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர நகர் மன்றத்தால் ஏற்கப்பட்டு தற்போது 16X24=384 சதுரடி பரப்பளவில் மட்டும் நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட கடை உள்ளதாக சந்தை கண்காணப்பாளரால் 05.01.2021-ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி 16X24=384 சதுரடி மட்டும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) சந்தை மதிப்பின்படி சதுரடி 1க்கு ரூ.6/- ஆக நிர்ணயம் செய்தும், வைப்புத்தொகை ரூ.15,000/- கூடுதல் வைப்புத்தொகை ரூ.75,000/- ஆக நிர்ணயம் செய்து

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3547/2020/அ6

2703) நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு 30.12.2020-ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | குத்தகை இனம் கடையின் விபரம் | பெயர்/முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண்.22 | டி.வெள்ளிங்கிரி<br>மாகாளியம்மன் கோவில் வீதி<br>போடிபாளையம்<br>ஜமீன் ஊத்துக்குளி | 18500 |
| | | எஸ்.சதீஸ் நிஷா<br>78 அண்ணா நகர்<br>டி.கோட்டாம்பட்டி பொள்ளாச்சி | 21000 |
| 2 | அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண்.26 | வி.வள்ளியம்மாள்<br>75/51 முத்து லே அவுட்<br>ஊத்துக்காடு ரோடு பொள்ளாச்சி | 19100 |
| | | ஜெ.லதா பிரியா<br>3/1 டாக்டர் அன்சாரி வீதி<br>பொள்ளாச்சி | 18800 |
| 3 | கூடுதல் பேருந்து நிலையம் தரைத்தள கடை எண்.05 | எம்.திருஞான முத்து<br>த/பெ முத்துச்சாமி<br>10/14-7 செல்லப்பக் கவுண்டர்வீதி<br>நஞ்சேகவுண்டன் புதூர் ஜமீன்<br>ஊத்துக்குளி பொள்ளாச்சி | 18000 |
| 4 | A பிளாக் கடை எண்.16 | எஸ்.பிரபு<br>த/பெ செல்வராஜ்<br>3/35 லிங்கையன் வீதி பொள்ளாச்சி | 9999 |
| 5 | காந்தி மார்க்கெட் மொத்த வியாபர கடை எண்.32 | ஏ.அப்துல ஹக்கிம்<br>3/134-47 ஏழுமலை நகர்<br>ஊஞ்சவேலாம்பட்டி பொள்ளாச்சி | 6500 |
| | | ஏ.கலீல் ரகுமான்<br>த/பெ அப்துல சுஜீல்<br>137/116 குமரன் நகர் பொள்ளாச்சி | 7250 |
| 6 | காந்தி மார்க்கெட் சில்லறை வியாபார கடை எண்.52 | கே.சுதா<br>க/பெ ஏ.கருப்புச்சாமி<br>எம்.எம்.ஜி காலனி<br>பாலக்காடு ரோடு நல்லூர்<br>ஜமீன் ஊத்துக்குளி(அ) பொள்ளாச்சி | 5700 |

| | |
|---|---|
| | மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1) வ.எண்.4-ல் குறிப்பிட்டுள்ள காந்தி மார்க்கெட் A பிளாக் கடை எண்.16 திரு.எஸ்.பிரபு என்பவர் மாத வாகை தொகை ரூ.9999/-க்கு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இக்கடையானது 01.04.2017 முதல் காலியாக உள்ளது. இக்கடைக்கு சுமார் 25 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன்வரவில்லை. நகர் மன்ற தீர்மானம் எண்.565 நாள்.29.08.2016-ல் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகை ரூ.8000/- ஐ விட ரூ.1999/- கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br>2) வ.எண்.5-ல் குறிப்பிட்டுள்ள காந்தி மார்க்கெட் தினசரி காய்கறி வியாபார சந்தையில் உள்ள மொத்த வியாபார கடை எண்.32-க்கு திரு.ஏ.கலீல் ரகுமான் என்பவர் மாத வாடகை தொகை ரூ.7250/-க்கு சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது திரு.அப்துல் ஹக்கிம் என்பவர் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை விட ரூ.750/- கூடுதலாகவும் கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.6300/-ஐ விட ரூ.950/- கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெறுள்ளதால் திரு.ஏ.கலீல் ரகுமான் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3) வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ள காந்தி மார்க்கெட் தினசரி காய்கறி வியாபார சந்தை வியாபார கடை எண்.52 திருமதி.கே.சுதா என்பவர் மாத வாடகை தொகை ரூ.5700/- ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இக்கடையானது 2017-ல் கட்டப்பட்டுள்ள நாள் முதல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வராமல் கடை காலியாகவே உள்ளது. இதன் அருகாமையில் உள்ள கடைகள் மாத வாடகை தொகை ரூ.5500/-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதால் திருமதி.கே.சுதா என்பவரின் மாத வாடகை தொகை ரூ.5700/-க்கான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>4) வ.எண்.1,2 மற்றும் 3-ல் குறிப்பிட்டுள்ள அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.22, 26 மற்றும் கூடுதல் பேருந்து நிலைய தரைத்தள கடை எண்.5-க்கு மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2704)** | நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 30.12.2020-ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. |

| வ. எண் | குத்தகை இனம் | பெயர்/முகவரி | குத்தகை தொகை |
|---|---|---|---|
| 1 | காந்தி மார்க்கெட் தினசரி காய்கறி வியாபார சந்தை நுழைவாயில் சுங்கம் வசூல் | காமாட்சிசுந்தரம்<br>த/பெ முத்துச்சாமி<br>18/7 ரயில்வே லைன் சந்து<br>வடுகபாளையம் பொள்ளாச்சி | 17,55,000 |

| | | | |
|---|---|---|---|
| | | ந.அழகப்பன்<br>த/பெ நடராஜ் கவுண்டர்<br>36 ராஜா ராமண்ணா நகர்<br>பாலக்காடு ரோடு பொள்ளாச்சி | 17,50,000 |
| 2 | தேர்நிலை தினசரி வியாபார சந்தை சுங்க வசூல் | பி.ரவிசங்கர்<br>27/62 என்.வி.எம் வீதி<br>வடுகபாளையம் பொள்ளாச்சி | 26,70,000 |
| 3 | பூ மார்க்கெட்டில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் பூக்கள் மற்றும் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் சுங்க வசூல் | வி.சந்திரன்<br>த/பெ வேலாயுதம்<br>39/1 ஊத்துக்காடு ரோடு<br>பொள்ளாச்சி | 7,96,000 |
| 4 | அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் உரிமம் | ஜி.ரவிச்சந்திரன்<br>த/பெ ஆர்.கோவிந்தராஜ்<br>மலையப்பகவுண்டர் காலனி<br>ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்(அ) | 6,19,999 |
| 5 | அண்ணா நூற்றாண்டு கூடுதல் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் வசூல் உரிமம் | ஆர்.பவின்<br>ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்(அ)<br>பொள்ளாச்சி | 6,00,009 |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) வ.எண்.1-ல் குறிப்பிட்ட இனத்திற்கு திரு.காமாட்சிசுந்தரம் என்பவர் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஆண்டு குத்தகை தொகை ரூ.17,55,000/- கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.16,55,076/-ஐ விட ரூ.99,924/- கூடுதலாகவும், திரு.ந.அழகப்பன் என்பவர் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.17,55,000/-ஐ விட ரூ.5,000/- கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) வ.எண்.2,3-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களில் கடந்தாண்டு குத்தகை தொகையினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3) வ.எண்.4 மற்றும் 5-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களில் கடந்தாண்டு குத்தகை தொகையினை விட குறைவாகவும், வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி மட்டும் சமர்ப்பித்துள்ளதால் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நிராகரித்திடவும், மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியினை கோரலாம்.

**ந.க.எண்.5035/2020/அ6**

**2705)** நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் தினசரி காய்கறி வியாபார சந்தை மொத்த வியாபார கடை எண்.07 திருமதி.காயத்ரி என்பவரால் மாத வாடகை தொகை ரூ.6800/-க்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டு வாடகை தொகை செலுத்தப்படாததால் 11.01.2021-ல் கடையானது பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக சந்தை கண்காணிப்பாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி, இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.02.2021 முதல் ரத்து செய்து கேட்பு நீக்கம் செய்திடவும், அன்னார் செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை தொகையினை வைப்புத்தொகை கணக்கில் இருந்து ஈடு செய்து, பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1131/2020/அ6

**2706)** நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் டி பிளாக் கடை எண்.08 திரு.சிராஜுதீன் என்பவரால் மாத வாடகை தொகை ரூ.5200/-க்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டு வாடகை தொகை செலுத்தப்படாததால் 31.12.2020ல் கடையானது பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக சந்தை கண்காணிப்பாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி, இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.01.2021 முதல் ரத்து செய்து கேட்பில் இருந்து நீக்கம் செய்திடவும், அன்னார் செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை தொகையினை வைப்புத்தொகை கணக்கில் இருந்து ஈடு செய்து மீத வைப்புத்தொகையினை பறிமுதல் செய்து வருவாய் நிதி கணக்கில் மாற்றம் செய்தும், பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1131/2020/அ6

**2707)** நகராட்சிக்கு சொந்தமான லாரிப்பேட்டை கடைகள் பின்புறம் காலியாக உள்ள இடத்தில் 16X24 அளவு கொண்ட 384 சதுரடி பரப்பு கொண்ட நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட கடைக்கு 13.01.2021-ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் / முகவரி | மாத வாடகை தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.சம்சுதீன்,<br>த/பெ கமர்தீன்,<br>1/91 பி-2 ஸ்ரீ அபிராமி நகர்,<br>சின்னாம்பாளையம்,<br>மாக்கினாம்பட்டி பொள்ளாச்சி | ரூ.1500/- |
| 2 | திருமதி.டி.கமலபுஷ்பம்,<br>6/8 ஆரோக்கியநாதர் வீதி,<br>பொள்ளாச்சசி | ரூ.2700/- |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. திரு.கே.சம்சுதீன் என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1500/-ஐ விட ரூ.1200/- கூடுதலாகவும், சந்தை மதிப்பின்படி சதுரடிக்கு ரூ.6/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டு 384 பரப்பளவு கொண்ட சதுரடிக்கு ரூ.2304/- ஐ விட ரூ.396/- கூடுதலாக வரப்பெற்ற திருமதி.டி.கமலபுஷ்பம் எனபவரின் மாத வாடகை தொகை ரூ.2700/-க்கான ஒப்பந்தப்பள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3547/2020/அ6

**2708)** நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 13.01.2021-ல் மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | பெயர் | ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | காந்தி வாரச்சந்தையில் ஆடுவதை கூடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.கார்மேகம், 25/1 நேதாஜி ரோடு பொள்ளாச்சி | 3,01,200/- |
| 2 | கடைவீதி துணை வணிக வளாகத்தில் உள்ள 62'X57' அளவுள்ள நகராட்சி பூ மார்க்கெட்டில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் பூக்களுக்கு சுங்க வசூல் மற்றும் மேற்படி இடத்தில் தற்காலிகமாக சில்லறை வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் உரிமத்தொகை வசூல் செய்யும் உரிமம் | திரு.வி.சந்திரன் த/பெ வேலாயுதம் 39/1 ஊத்துக்காடு ரோடு, பொள்ளாச்சி | 8,35,000/- |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனமானது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.2,85,192/-ஐ விட ரூ.16,008/- கூடுதலாக திரு.கார்மேகம் என்பவர் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,01,200/- ஐ மன்றம் ஏற்கலாம்.
2) வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனமானது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.7,94,904/- ஐ விட ரூ.40,096/- கூடுதலாக திரு.வி.சந்திரன் என்பவர் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,35,000/- ஐ மன்றம் ஏற்கலாம்

ந.க.எண்.5035/2020/அ6

**2709)** பொள்ளாச்சி நராட்சிக்குச் சொந்தமான கோவை சாலையில் உள்ள சங்கம்பாளையம் கிராமம் க.ச.எண்.142 மற்றும் 143–ல் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பொள்ளாச்சி (வடக்கு) ஊராட்சி ஒன்றியம் மூலம் கட்டிடம் கட்டி நகராட்சிக்கு

| | |
|---|---|
| | ஒப்படைப்பு செய்யுமாறு நகர் மன்றத் தீர்மான எண்.636, நாள்–30.10.2015ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இடம் பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. தற்போது மேற்படி இடத்தில் “அம்மா திருமண மண்டபம்” கட்டி முடிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.3058/2020/அ2, நாள்–31.03.2020ல் மேற்படி திருமண மண்டபத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக பொள்ளாச்சி (வடக்கு) ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவினத் தொகை ரூ.25,70,000/–ஐ செலவிட்டதை திரும்ப வழங்குமாறும், தொகை வழங்கும் வரை திருமண மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் எனவு தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட இடமானது தேசிய நெடுஞ்சாலை சாலையை ஒட்டி அமைந்துள்ளதாலும், வண்டி வாகனம் நிறுத்துமிடம் அதிகமாக உள்ள காரணத்தாலும், நிலமதிப்பு அதிகமாக உள்ளதாலும், மேற்படி திருமண மண்டபத்தினை உடனடியாக நகராட்சி கட்டுப்பாட்டில் கொண்டு வர மேற்கண்ட தொகை ரூ.25,70,000/–ஐ மூன்று அல்லது நான்கு தவணைகளாக செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4804/2015/ஜி1 |
| **2710)** | **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் பொது சுகாதார வாகனங்களை இயக்க ஓட்டுநர் பற்றாக்குறை உள்ளதால் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் 4 (நான்கு) ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு (06.01.2021 முதல் 30.06.2021 வரை) பணியமர்த்தும் பொருட்டு 05.01.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் உறைகள் Offline முறையில் வரப்பெற்றன. Online முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**<br><br>**திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஸ்மென்ட் சர்வீஸ், 18/182 சி, அப்பட்டுவிளை, முலகுமுடு, கன்னியாகுமரி - 629 167.** — **ரூ.820/- (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு)**<br>**திருவாளர்கள்.ஸ்டீவின் அசோசியேட்ஸ், 13/31ஏ, அப்பட்டுவிளை, முலகுமுடு, கன்னியாகுமரி - 629 167.** — **ரூ.850/- (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு)**<br><br>**மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்கள். சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் அவர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி மற்றும் இதர படிகளுடன் கூடிய தொகையினை விட குறைவான தொகையில் ரூ.820/- க்கு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு) ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே, திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனெஜ்மென்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு:-<br>**1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனெஜ்மென்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**<br>**3. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்- 567/2017/எச்2** |

| | |
|---|---|
| 2711) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் சலூன், பியூட்டி பார்லர்கள், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் ந.க.எண்.19775/2000/ஜே2/ நாள்.15.12.2000-ம் எண்ணிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன் பேரில் இந்நிலையங்களுக்கு 1920 ஆண்டு நகராட்சிகளின் சட்ட பிரிவு 1920 ஷெட்டியூலில் V சேர்க்கப்பட்டு மேற்கண்ட இனங்களுக்கு உரிமக்கட்டணம் வசூலிக்க தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.5794/- பொது நிதியில் இருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1) மன்றம் அனுமதிக்கலாம். |
| 2712) | பொள்ளாச்சி நகராட்சியில் உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள Inert Meterial கழிவுகள் மற்றும் இதர கழிவுகள் அனைத்தையும் உரக்கிடங்கின் மேற்குப் பகுதி ஓரமாக எடுத்து செல்ல கனரக மண் அள்ளும் இயந்திரம் வழங்குதல் மற்றும் இயக்கம் போன்றவற்றிற்கு 19.01.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-<br><br>வ. எண் / பெயர் / மதிப்பீட்டு தொகை 1 மணி நேர இயக்கத்திற்கு<br>1 / திரு.ஆர்.சுப்பிரமணியம், 103, நல்லாப்பா நகர், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி. / ரூ. 1,900/-<br>2 / திருவாளர்கள். எம்.எஸ் தண்டபாணி அன் கோ, 11/31, தந்தை பெரியார் வீதி, மரப்பேட்டை, உடுமலை ரோடு, பொள்ளாச்சி. / ரூ. 1,950/-<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்ந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.சுப்பிரமணியம், 103, நல்லாப்பா நகர், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்- 5845/2020/எச்2 |
| 2713) | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக் குறித்தும் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், திடக்கழிவு மேலாண்மையில் மக்கும் மற்றும் மக்காத குப்பைக் குறித்து மற்றும் மழைக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடிவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட விளம்பர நோட்டீஸ் அச்சடித்து வழங்கும் பணிக்கு 20.01.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. |

<u>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-</u>

| வ. எண் | விபரம் | கோவில்பட்டி ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்டஸ்ட்ரியல் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிட் | திருநெல்வேலி மாவட்டம் மல்டி பர்போஸ் சர்வீஸ் இன்டஸ்ட்ரியல் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிட் |
|---|---|---|---|
| 1 | குளிர் மற்றும் மழைக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் (A4 SIZE MULTICOLOUR STICKERS) | ரூ.15/- +GST | ரூ.16/- +GST |
| 2 | டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு ஸ்டிக்கர் (A4 SIZE MULTICOLOUR) | ரூ.15/- +GST | ரூ.16/- +GST |
| 3 | கொரோனா விழிப்புணர்வு, சமூக இடைவெளியின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் (A4 SIZE MULTICOLOUR) | ரூ.15/- +GST | ரூ.16/- +GST |
| 4 | திடக்கழிவு மேலாண்மையில் மக்கும் மற்றும் மக்காத குப்பை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்(A4 SIZE MULTICOLOUR) | ரூ.15/- +GST | ரூ.16/- +GST |
| 5 | டெங்கு காய்ச்சல் பரவும் வீதம் மற்றும் தடுப்பு நடவடிக்கை குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் (4 PAGES WITH MULTI COLOUR) | ரூ.7.50/- +GST | ரூ.8.10/- +GST |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கோவில்பட்டி ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்டஸ்ட்ரியல் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிட், கோவில்பட்டி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்- 5768/2020/எச்2

| | |
|---|---|
| 2714) | **பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண் TN 41 AE 3843 (டிப்பர்) வாகனத்தின்** Centre Joint removing stars,Yoke & teeth change, Flywheel ring change, Self motor overhauling and wornout parts change,Hydraulic PTO switch change and air leak arresting **ஆகிய பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.27,500/-த்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கோள்ளவும் மற்றும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2. **பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்- 6077/2020/எச்2** |
| 2715) | **பொள்ளாச்சி நகராட்சியில் அன்றாடம் சேகரிக்கப்படும் 43மெ.டன் திடக்கழிவுகளிலிருந்து மட்கும் திடக்கழிவுகள் மட்டும் அன்றாடம் பிரித்தெடுக்கப்பட்டு MCC மையங்களில் உரமாக்கப்படுகிறது. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் துப்புரவு பணியாளர்கள் மூலம் அன்றாடம் பிரித்து விற்பனை செய்யப்படுகிறது. இவை தவிர உரமாக்க இயலாத, மட்காத, மறுசுழற்சி செய்ய இயலாத, எரிபொருளுக்கு அனுப்ப இயலாத கழிவுகள் மட்டும் பிரித்தெடுக்கப்பட்டு அன்றாடம் சேகரிக்கப்படுகிறது.**<br><br>**இவை அதிக அளவில் பரவி இருப்பதனால் இடவசதி பற்றாக்குறை ஏற்பட்டு தொடர்ந்து நல்லூர் உரக்கிடங்கில் இதர கழிவுகள் கொட்டப்பட வாய்ப்பில்லாமல் உள்ளது. மேலும், இக்கழிவுகளில் ஒர்க்ஷாப்களில் இருந்து வரும் ஆயில்வேஸ்ட், துணிக் கழிவுகள், பழைய துணிகள், மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் மற்றும், தெர்மோகோல், ரெக்ஷின், ஏற்கனவே பயன்படுத்திய போம் மெத்தைகள் (இதர கழிவுகள் - Inert-Materials) அதிக அளவில் உள்ளதால் இவை எளிதில் தீப்பிடித்து தீ விபத்துகள் ஏற்பட்டு பிற உரக்கிடங்கின் பிற பகுதிகளுக்கு பரவிடும் அபாயம் உள்ளது. Compost yard - IIல் உள்ள இயந்திரங்கள் பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளது.**<br>**இதனை தவிர்க்க உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள மேற்கண்ட Inert-Materials கழிவுகள், இதர கழிவுகள் அனைத்தையும் உரக்கிடங்கின் மேற்கு பகுதி ஓரமாக எடுத்துச் சென்று உரக்கிடங்கில் போதிய இடவசதி ஏற்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கு கனரக மண் அள்ளும் இயந்திரம் (Hitachi Earth Mover) இயக்க வேண்டியது அவசியமாகிறது. வெளிமார்க்கெட்டில் Hitachi Earth Mover வாடகைக் கட்டணம் எரிபொருள், ஓட்டுனர் கூலி இதர செலவிகள் உள்பட ஒரு மணி நேர இயக்கத்திற்கு ரூ.2000/- செலவாகின்றது. இப்பணிகள் மேற்கொள்ள உத்தேசமாக ரூ.6,00,000/- செலவாகலாம். இப்பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரவும், இதற்குரிய செலவினத்திற்கும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. **பொது சுகாதார அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்-5845/2020/எச்2** |

**2716)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31, முகமது வீதியில் தற்சமயம் குடிநீர் பகிர்மான குழாயில் (மரப்பேட்டை வழியாக) அதிகமான வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதால், மேற்காண் வீதியில் உள்ள அனைத்து இணைப்புகளுக்கும் குடிநீர் போதிய அளவு விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்காண் வீதிக்கு கூடுதலாக பகிர்மான குழாய் அமைத்தால் மட்டுமே, அனைத்து இணைப்புகளுக்கும் சீரான வகையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலும். மேலும் நகராட்சிக்குட்பட்ட மகாலிங்கபுரம், சுதர்சன் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் உள்ள வால்வுகள் அடிக்கடி பழுதாகி விடுகிறது. எனவே மேற்காணும் வால்வுகளை புதுப்பிக்கவும், முகமது வீதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைப்பதற்கும் ரூ.9.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 5345/2020/இ1

**2717)** பொள்ளாச்சி நகராட்சியின் செயல்பாட்டிற்காக பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் வாகனங்களின் வருட காப்பீட்டு (Insurance) 2021-ம் ஆண்டிற்கு புதுப்பித்தல் செய்ய செலுத்தும் கட்டணத்தொகைகளுக்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனமதி பெற்று தொகை செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2138/2019/இ2

**2718)** பொள்ளாச்சி நகராட்சியில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020-21 ஆம் ஆண்டில் (TNSUDP) கீழ்க்கண்ட சாலைகளில் தார்த்தளம் அமைக்க ரூ.1000.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

<u>பணிகளின் விபரம்</u>:

| வ. எண் | வேலையின் பெயர் | வார்டு எண் | நீளம் (கி.மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | ஆர்.பி. நகர், கொங்கு நகர், நேதாஜி ரோடு உயர் கோபுர விளக்கு முதல் பாலக்காடு சாலை வரை, முத்துகுமரசாமி லேஅவுட், ராமாத்தாள் லே அவுட்,வடுகபாளையம் | 01,02,03, 04,22,23, 24,25,27 | 6.83 | 400.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இட்டேரி சாலை, வடுகபாளையம் இட்டேரி குறுக்கு வீதிகள், ரயில்வே லைன் சந்து, கந்தன் வீதி, செல்லகுமாரர் வீதி தொடர்ச்சி, பி.கே.டி பள்ளிக்கூட சாலை, அபிராமி ஆண்டாள் நகர் குறுக்கு வீதிகள், குமரன் நகர், குமரன் நகர் பள்ளிக்கூட சாலை, ரயில்வே ஸ்டேசன் ரோடு, வள்ளியம்மாள் லேஅவுட், கண்ணப்பன் நகர், நியூ அலகப்பா லேஅவுட், கிருஷ்ணசாமி பள்ளிக்கூட சாலை, பழனியப்பன் வீதி குறுக்கு வீதிகள், ராம் நகர் பிரதான மற்றும் குறுக்கு வீதிகள், வி.கே.வி லேஅவுட் குறுக்கு வீதிகள் மற்றும் அன்பு நகர் ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | | | |
| | **2.** | வெங்கடாசலபுரம் பிரதான மற்றும் குறுக்கு வீதிகள், LIG காலனி, டீச்சர்ஸ் காலனி, சோமசுந்தராபுரம் 1வது,2வது,3வது கிழமேல் சாலைகள், லட்சுமி புரம் டேங்க் கிழக்குபுற சாலை, பவானி சங்கர் வீதி, மரப்பேட்டை பள்ளம் இஸ்லாமியர்கள் மயான பின்புற சாலை, P.S ஆறுமுகம் நகர், கிழக்கு மேற்கு சாலை, லட்சுமி நகர் மயில்சாமி வீதி, முகமது நகர் மற்றும் சுண்ணாம்பு கால்வாய் இட்டேரி சாலை ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 11,31,32, 34,35,36 | 4.00 | 200.00 |
| | **3.** | வெங்கடராமபுரம் வீதி, சுப்புமாட வீதி, டாக்டர் முனுசாமி வீதி, விநாயகர் கோயில் வீதி, வாணி மாட வீதி, நந்தனார் காலனி, ராஜேஸ்வரி நகர், முல்லை நகர், ஸ்டேட் பாங்க் காலனி, LIG காலனி பிரதான சாலை, அண்ணா அவென்யூ, MGR நகர் சாலை, சேதுபதி நகர் மற்றும் ஆறுமுகம் நகர் மேற்கு சாலை ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 06,08,09, 10,14 | 3.72 | 200.00 |
| | **4.** | விஜயராகவன் வீதி, V.O.C வீதி, அதியமான் வீதி, அம்மணீஸ்வரன் கோயில் வீதி, பாரி வள்ளல் வீதி, திருவள்ளுவர் வீதி, கம்பர் வீதி, ஆறுமுகம் நகர் கிழக்கு, நாச்சிமுத்து வீதி, கரியகாளியம்மன் கோயில் வீதி மற்றும் கணபதி நகர் சாலைகள் ஆகிய வீதிகளில் தார்தளம் அமைத்தல். | 05,06,07, 08,35 | 3.54 | 200.( |
| | | **மொத்தம்** | | **18.09** | **1000.(** |

| | |
|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவினை, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தால் (TNUIFSL) கூர்ந்தாய்வு செய்து, நிதி ஆதாரம் வழங்கியது.<br>நிதி ஆதாரத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br>நிதி ஆதார அடிப்படையில் மேற்காணும் மதிப்பீட்டுத் தொகைக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:07.01.2021-க்குரிய அரசாணை எண்:02-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>வரப்பெற்ற நிர்வாக அனுமதியை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம். |